

**அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்,**

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தொலைபேசி
0431 – 2670 460.

E-Mail
symmariamman@gmail.com

# பலவகை சப்ளை இனங்கள் டெண்டர்

## விளம்பர அறிவிப்பு மற்றும் நிபந்தனைகள்

## ந.எண். 13185/1432/சி4–3. நாள்.11.07.2022

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பசலி 1432க்கு (01.07.2022 முதல் 30.06.2023 வரை) ஒரு வருட காலத்திற்கு , திருக்கோயில் மூலம் பிரசாதங்கள் தயார் செய்து விற்பனை செய்வதற்கு தேவையான டப்பாக்கள் P.P கவர், வாழை சருகு தொன்னை மற்றும் பட்டர் கவர்கள் சப்ளை செய்வதற்கு டெண்டர் பின்வரும் விபரப்படி நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 1. | டெண்டர் படிவத்தின் விலை | ரூ.500/– (திரும்பப் பெறத்தக்கதல்ல) பதிவிறக்கம் செய்பவர்கள் ரூ.500/–க்கு படிவத்துடன் வரைவோலை இணைக்க வேண்டும். |
| 2. | டெண்டர் படிவம் வழங்கப்படும் நாள் | 12.07.2022 முதல் 29 .07.2022 மாலை 5.00 மணி வரை (அலுவலக வேலை நாட்கள் மட்டும்) |
| 3. | டெண்டர் கொடுக்ககடைசி நாள் / நேரம் | 29.07.2022 பிற்பகல் 01.00 மணி |
| 4. | டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் | 29.07.2022 பிற்பகல் 03.00 மணிக்கு |
| 5. | டெண்டர் நடைபெறும் இடம் | திருக்கோயில் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மாரியம்மன் மண்டபத்தில் முதல் தளத்தில் நடைபெறும். |

### டெண்டர் கோரும் இனங்களின் விபரம்

| வ. எண் | டெண்டர் கோரும் இனங்களின் பெயர் | | டெபாசிட் தொகை |
|---|---|---|---|
| 1. | பஞ்சாமிர்த டப்பா (450 கிராம் கொள்ளளவு ) | | 10,000 |
| | பஞ்சாமிர்த டப்பா லேபிள் ( 21 செ.மீ X 5 செ.மீ – மாரியம்மன் படம் / திருக்கோயில் குறிப்பிடும் வாசகம் ) | | |
| 2. | 250 ML அளவுள்ள (புளிசாதம், சர்க்கரை பொங்கல்) பேக்கிங் செய்ய அரசு மற்றும் உணவு பாதுகாப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரமான பிளாஸ்டிக் டப்பாக்கள் | | 10,000 |
| 3. | 1. 7 X 8 PP கவர் | | 10,000 |
| | 2. 6 X 7 PP கவர் | | |
| | 3. 5 X 7 PP கவர் | | |
| | 4. 4 X 5 PP கவர் | | |
| | 5. 18 X 24 பட்டர் கவர் | | |
| | 6. 7 X 8 பட்டர் கவர் | ( அரசால் அங்கீகரிக்கப்பட்ட 51 மைக்ரானுக்கு குறையாமல் ) | |
| | 7. 6 X 7 பட்டர் கவர் | | |
| | 8. 15 X 24 பட்டர் கவர் | | |
| | 9. 12 X 19 பட்டர் கவர் | | |
| | 10. 5 X 7 பட்டர் கவர் | | |
| | 11. 10 X 16 பட்டர் கவர் | | |
| | 12. 4 X 5 பட்டர் கவர் | | |
| 5. | வாழை சருகு தொன்னை | | 2,000 |

## டெண்டர் நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிதாரர் அல்லது நிறுவனத்தினர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

2. திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர்களோ, திருக்கோயிலுக்கு எவ்வகையிலேனும் பாக்கி செலுத்த வேண்டியிருப்பவர்களோ, திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்களோ நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்களோ, இளவர்களோ, (Minor) ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
3. திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள், ஒப்பந்தப்புள்ளிகளை பசலி காலம் முடிய பூர்த்தி செய்யாதவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.
4. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள், பினாமிகள் , அவர்களது கூட்டாளிகள் திருக்கோயிலுக்கு எதிராக டிகிரி செய்யப்பட்டவர்கள், திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், வழக்கு தொடுத்தவர்கள், குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள் டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
5. மேற்காணும் இனங்களுக்கு தனித்தனியாக டெண்டர் படிவம் பெற்று டெண்டருக்கான டெபாசிட் தொகைக்கு **Joint Commissioner/ Executive Officer, Arulmighu Mariamman Temple, Samayapuram** என்ற பெயரில் , வங்கி வரைவோலைப் பெற்று, வரைவோலையினை டெண்டர் படிவத்துடன் இணைத்து டெண்டர் கொடுக்க வேண்டும். வங்கி வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ரொக்கம் ஏற்கொள்ளப்பட மாட்டாது.
6. டெண்டர் படிவத்தில் சப்ளை பொருட்களின் விலை விபரத்தை **(GST உட்பட)** எண்ணாலும், எழுத்தாலும் அடித்தல், திருத்தல் இன்றி தெளிவாக குறிப்பிட்டும், படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்தும் 29.07.2022 பிற்பகல் 01.00 மணிக்குள் இத்திருக்கோயில் அலுவலகத்தில் உள்ள டெண்டர் பெட்டியில் செலுத்த வேண்டும். **GST** யில் மாற்றம் / உயர்வு ஏதும் செய்யப்படின் அதற்கென கூடுதல் தொகை ஏதும் திருக்கோயில் நிர்வாகம் வழங்காது. டெண்டர்தாரரே அதனையும் செலுத்தி கொள்ள வேண்டும்.
7. சப்ளை செய்த இனங்களுக்கு வருமானவரி, GST வரி உள்ளிட்ட வேறு அனைத்து சட்டபூர்வமான வரிகள் மற்றும் அரசு கட்டணங்களை டெண்டர்தாரர் தன்சொந்த பொறுப்பிலேயே செலுத்திக் கொள்ளவேண்டும். இத்தொகைகளுக்கு திருக்கோயில் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
8. பொது ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள வந்தவர்கள் நியாயமான தொகைக்கு டெண்டர் கேட்கவில்லை என திருக்கோயில் நிர்வாகம் கருதினால் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவும், எக்காரணமும் காட்டாது டெண்டரை உடனடியாக ரத்து செய்து, மறு டெண்டர் விடவும், டெண்டர் தொகையினை பறிமுதல் செய்யவும், திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.
9. டெண்டர் நடவடிக்கை தொடங்கும் முன்னர் டெண்டர் கொடுத்தவர்கள் டெபாசிட் செலுத்தியதற்கான வரைவோலையின் நகலினை அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அதன் பிறகே டெண்டர்தாரர் பெயர் டெண்டர் பதிவேட்டில் பதிவு செய்யப்படும்.
10. ஒப்பந்தப்புள்ளிதாரர் சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தபுள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள் ஒப்பந்தம் விடவோ கூடாது. இந்நிபந்தனைகளை மீறினால் ஒப்பந்தப்புள்ளி முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
11. டெண்டர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரின் அங்கீகாரத்துக்கும், ரத்து அதிகாரத்துக்கும் உட்பட்டதாகும்.
12. மேற்கண்ட விபரப்படியான பொருட்களை திருக்கோயில் இடத்திற்கே நேரடியாக திருக்கோயில் தேவைக்கேற்ப அவ்வப்போது சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு சப்ளை செய்யாமல் தாமதம் ஏற்படின் டெண்டர் ரத்து செய்யப்பட்டு மறு டெண்டர் கோரப்படும். மறு டெண்டரில் தொகை அதிகம் ஏற்பட்டால் முன் டெண்டர்தாரர் அதனை ஈடு செய்ய வேண்டும்.

13. டெண்டர் விளம்பரத்தில் அளிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் டெண்டர் மற்றும் டெபாசிட் வரைவோலையுடன் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு பின்னர் வரப்பெறும் எந்த ஒரு டெண்டர் டெபாசிட்டும் ஏற்கப்படமாட்டாது.

14. வரப்பெற்ற டெண்டர் கவர்கள் இலாகா அலுவலர்கள் மற்றும் வருகை தந்துள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையிலும் திறக்கப்பட்டு, வரப்பெற்ற டெண்டர்களில் குறைந்த டெண்டர் மதிப்புத் தொகை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பதிவு செய்யப்படும்.
15. டெண்டர்தாரர் டெண்டர் திறப்பின் போது தான் சப்ளை செய்யும் பொருட்களின் மாதிரியை இணை ஆணையர்/ செயல் அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.
16. டெண்டரில் ஒப்புக் கொண்ட தொகைக்கு மேல் எக்காரணம் கொண்டும் கூடுதலாக தொகை வழங்கப்படமாட்டாது.
17. ஒப்பந்தப்புள்ளி அடித்தல் திருத்தல் இன்றி தொகை எண்ணாலும் மற்றும் எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும். அடித்தல், திருத்தல் உள்ள விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
18. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளிதாரர் முழு முகவரியை தெளிவாக குறிப்பிட்டு கைப்பேசி எண்ணையும் குறிப்பிட வேண்டும்.
19. விலைப்புள்ளி கொடுக்கும் போது சப்ளை செய்ய உள்ள பொருட்களின் மாதிரியை இணைத்து கவரில் வைத்து கொடுக்க வேண்டும். டெண்டர் உறுதி செய்யப்படும் பட்சத்தில் சப்ளை செய்யும் பொருள் மாதிரியாக இணைத்து கொடுக்கப்பட்ட பொருளாகவே இருக்க வேண்டும்.
20. அடுத்த பசலிக்கு **1433.**க்கு டெண்டர் கோரி, அந்த டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்படும் நாள் வரையிலும் பசலி **1432.**ன் டெண்டர்ரேட் அடிப்படையிலேயே தினசரி சப்ளை செய்ய வேண்டும்.
21. மேற்படி டெண்டரை காரணம் காட்டாது திருக்கோயில் நிர்வாகத்தின் நன்மைக்கேற்ப டெண்டர் நடைபெறும் நிலை உள்ளிட்ட எந்த நேரங்களிலும் - நிறுத்தி வைக்கவோ ரத்து செய்யவோ, மாற்றி வைக்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
22. டெண்டர் உறுதியாகாதவர்கள் தாங்கள் செலுத்தியுள்ள டெண்டர் டெபாசிட் தொகைக்கான வரைவோலையை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
23. எதிர்பாராத நிலையில், டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்படாமல் ரத்து செய்யப்படும் நிலையில், டெபாசிட் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது.
24. டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டவுடன் ரூ. 100/- அரசு முத்திரைத்தாளில் , திருக்கோயில் வாசகப்படி, டெண்டர் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு டெண்டர்தாரர் முச்சலிக்கா பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
25. முச்சலிக்கா பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னரே டெண்டரை ஏற்று உறுதி செய்து, அனுமதி உத்தரவு இத்திருக்கோயிலிலிருந்து பிறப்பிக்கப்படும்.
26. ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், நடைமுறை விதிகளுக்கும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.
27. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பின்பற்றத் தவறினாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
28. எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்க கிடையாது.
29. டெண்டர் காலமான **30.06.2022**–ம் தேதி பிற்பகலில் முடிவுற்றவுடன் இதன் முழு உரிமைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி, தன்னிச்சையாக திருக்கோயிலை வந்து சேரும். டெண்டர்காலம் முடிந்தவுடன் டெண்டர் குறித்து எவ்வித உரிமையும் பின்தொடர்ச்சியும் டெண்டர் எடுத்த நபருக்கு கிடையாது.

1. **<u>பஞ்சாமிர்த டப்பா சப்ளை செய்தல்</u>**
   1. 450 கிராம் கொள்ளளவு உள்ளதாக இருக்க வேண்டும்.
   2. Virigin பாலிப்புரப்பிலீனால் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
   3. அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் மட்டுமே ஏற்கப்படும்.
   4. மேல்மூடி இருக்க வேண்டும். அது சாயம் ஒட்டாத தன்மை உடையதாக இருக்க வேண்டும்.
   5. திருக்கோயில் பெயருடன் 21 செ.மீ X 5 செ.மீ அருள்மிகு மாரியம்மன் படம் மல்டி கலர் லேபிள் ஒட்டி தர வேண்டும்.
   6. மேற்படி பஞ்சாமிர்த டப்பாக்களை திருக்கோயிலுக்கு நேரடியாக தங்களது சொந்த செலவில் சப்ளை செய்யப்பட வேண்டும். சப்ளை செய்யப்படும் டப்பாக்களை தயாரிக்கும் நிறுவனம் ISO தரச்சான்று பெற்று இருக்க வேண்டும்
   7. மேலும் Inspector of Factories Registration, சிறு தொழில் முனைவோருக்கான சான்று நகல் (MSME) எண் பெற்றிருக்க வேண்டும்.

8. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு வருமான வரி தாக்கல் செய்ததற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. பழுதிருந்தால் உடன் திரும்ப எடுத்துக் கொண்டு மாற்றித்தர வேண்டும்.
10. டெண்டர் நடைபெறும் போது மாதிரி டப்பா சமர்ப்பிக்க வேண்டும்.
11. கடந்த ஒரு ஆண்டிற்கு மாதந்தோறும் GST பதிவு செய்ததற்கான சான்று நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

2. <u>**250 மில்லி பிளாஸ்டிக் டப்பாக்கள் சப்ளை செய்தல்**</u>

1. திருக்கோயில் பிரசாத விற்பனை நிலையத்திற்கு புளிசாதம், சர்க்கரை பொங்கல் பிரசாதம் வழங்க ஏதுவாக 250 மில்லி கொள்ளவு உடைய அரசு மற்றும் உணவு பாதுகாப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் டப்பாக்கள் சப்ளை செய்ய வேண்டும்.
2. Virigin பாலி புரப்பிலீனால் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
3. மேல்மூடி இருக்க வேண்டும். அது சாயம் ஒட்டாத தன்மை உடையதாக இருக்க வேண்டும்.
4. பிளாஸ்டிக் டப்பாக்களை திருக்கோயிலுக்கு நேரடியாக தங்களது சொந்த செலவில் சப்ளை செய்யப்பட வேண்டும்.
5. பழுதிருந்தால் உடன் திரும்ப எடுத்துக் கொண்டு மாற்றித்தர வேண்டும்.
6. டப்பாக்களை திருக்கோயிலுக்கு நேரடியாக தங்களது சொந்த செலவில் சப்ளை செய்யப்பட வேண்டும். சப்ளை செய்யப்படும் டப்பாக்களை தயாரிக்கும் நிறுவனம் ISO தரச்சான்று பெற்று இருக்க வேண்டும்
7. மேலும் Inspector of Factories Registration, சிறு தொழில் முனைவோருக்கான சான்று நகல் (MSME) எண் பெற்றிருக்க வேண்டும்.
8. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு வருமான வரி தாக்கல் செய்ததற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. கடந்த ஒரு ஆண்டிற்கு மாதந்தோறும் GST பதிவு செய்ததற்கான சான்று நகல் சமர்ப்பிக்க வேண்டும்.
10. வரிசை எண். 6,7,8 உள்ள நிபந்தனைகளின் நகல், Pan Card , Adhar card, GST Registration நகல் மற்றும் ரூ.500/– செலுத்தி திருக்கோயிலில் அலுவலக நேரத்தில் டெண்டர் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

3. <u>**PP கவர் மற்றும் பட்டர் கவர் சப்ளை செய்தல்**</u>

திருக்கோயில் பிரசாத விற்பனை நிலையத்திற்கு தேவையான லட்டு, முறுக்கு , அதிரசம், மிளகு தட்டை போன்ற பிரசாதங்களை சுகாதாரமான முறையில் வழங்குவதற்கு அரசு அங்கீகரிக்கப்பட்ட 51 மைக்ரானுக்கு குறையாமல் கீழ்க்கண்ட விபரப்படியான PP கவர் மற்றும் பட்டர் கவர்களை திருக்கோயிலுக்கு நேரடியாக சொந்த பொறுப்பில் சப்ளை செய்ய வேண்டும்.

1. Inspector of Factories Registration, சிறு தொழில் முனைவோருக்கான சான்று நகல் (MSME) எண் பெற்றிருக்க வேண்டும்.
2. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு வருமான வரி தாக்கல் செய்ததற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. கடந்த ஒரு ஆண்டிற்கு மாதந்தோறும் GST பதிவு செய்ததற்கான சான்று நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

4. வரிசை எண். 1,2,3 உள்ள நிபந்தனைகளின் நகல், Pan Card , Adhar card, GST Registration நகல் மற்றும் ரூ.500/– செலுத்தி திருக்கோயிலில் அலுவலக நேரத்தில் டெண்டர் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

1. 7 X 8 PP கவர்
2. 6 X 7 PP கவர்
3. 5 X 7 PP கவர்
4. 4 X 5 PP கவர்
5. 18 X 24 பட்டர் கவர்
6. 7 X 8 பட்டர் கவர்
7. 6 X 7 பட்டர் கவர்
8. 15 X 24 பட்டர் கவர்

9. 12 X 19 பட்டர் கவர்
10. 5 X 7 பட்டர் கவர்
11. 10 X 16 பட்டர் கவர்
12. 4 X 5 பட்டர் கவர்

5. <u>**சருகு தொன்னை சப்ளை செய்தல்**</u>

1. திருக்கோயில் பிரசாத விற்பனை நிலையத்தில் சர்க்கரை பொங்கல் , புளி சாதம் ஆகிய பிரசாதங்களை வழங்குவதற்கு ஏதவாக சருகு தொன்னைகள் திருக்கோயிலுக்கு நேரடியாக சப்ளை செய்ய வேண்டும்.
2. சப்ளை செய்யப்படும் சருகு தொன்னைகள் எண்ணிக்கை சரியானதாகவும், தரமாகவும் இருக்க வேண்டும்.
3. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு வருமான வரி தாக்கல் செய்ததற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. வரிசை எண். 3 உள்ள நிபந்தனைகள், Pan Card , Adhar card, GST Registration நகல் மற்றும் ரூ.500/– செலுத்தி திருக்கோயிலில் அலுவலக நேரத்தில் டெண்டர் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.
5. பழுது இருந்தால் உடன் மாற்றி தர வேண்டும்.

(கோவிட் – 19) கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் பேரிடர் காரணமாக விலைப்புள்ளி திறப்பில் கலந்து கொள்பவர்கள் உடல் வெப்பநிலை பரிசோதனைக்கு உட்படுத்தியும் கண்டிப்பாக கையுறை, முகக்கவசம் அணிந்து வரவும், சமூக இடைவெளி பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறின் விலைப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். ஒப்பந்தம் உறுதியான பிறகு, ஒப்பந்ததாரரின் பணியாளர்கள் அரசு வழிகாட்டி நெறிமுறைகளின் படி நடக்க வேண்டும்.

நிபந்தனைகள் ஏதும் இருப்பின் டெண்டரின் போது அறிவிக்கப்படும் மற்றும் மேற்குறித்த நிபந்தனைகளில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் திருக்கோயில் மின்னஞ்சல் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

நிபந்தனைகளை https://samayapurammariamman.hrce.tn.gov.in http://tenders.tn.gov.in இணையதளத்தில் திருக்கோயில் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**சி.** கல்யாணி, எம்.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்